புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • அக்டோபர், 16 2025 • புரட்சி 25 • முழக்கம் 41 • விலை ரூ.6.00

## தோழர் வே.ஆனைமுத்து நூற்றாண்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உணர்ச்சியுரை!

# ஈரோட்டுப் பாதையில் நடைபோடுவோம்!

ஈரோட்டுப் பாதை தான் நமக்கு வழி காட்டுகிறது; பெரியார் இயக்கம் தான் எனது தாய் வீடு என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதத்துடன் அறிவித்துள்ளார். சென்னையில் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி தலைவர் மறைந்த தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழாவில் பங்கேற்று துணை முதலமைச்சர் நிகழ்த்திய உரையிலிருந்து சில பகுதிகள்...



பெரியாரின் தொண்டர்களுக்கு ஒரு சிறப்பு உண்டு. பெரியாரின் தொண்டர்களை, துறவிகளைவிட மேலானவர்கள் என்று பெருமையாக சொல்வார்கள். அதற்கு மிகச்சிறந்த உதாரணம்தான் அய்யா ஆனைமுத்து அவர்கள். பெரியார் தொண்டர்களின் தன்னலம் இல்லாத உழைப்புதான், தமிழ்நாட்டை சுயமரியாதை மண்ணாக மாற்றி வைத்துள்ளது.

எத்தனையோ நிகழ்ச்சிகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் விட, மிகமிக முக்கியமான நிகழ்ச்சியாக நான் கருதுவது, இன்றைக்கு இந்த அரங்கில் நடந்துகொண்டு இருக்கின்ற அறிஞர் ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா. இன்னும் சொல்லப்போனால், எனது தாய் வீட்டிற்கு நான் வருகை தந்துள்ளேன்.

பெரியார் தொண்டர்கள் நிறைந்து இருக்கிற இந்த அரங்கத்தில் இன்னும் நான் அழுத்தம், திருத்தமாக சொல்ல விரும்புகிறேன். மாநில உரிமைக்காக தமிழ்நாடு போராடும், சமூகநீதியைக் காக்க தமிழ்நாடு என்றும் போராடும், மத வெறி, ஜாதி வெறியை எதிர்த்து தமிழ்நாடு நிச்சயம் போராடும், இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ்நாடு தொடர்ந்து போராடும், ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசை எதிர்த்து தமிழ்நாடு என்றைக்கும் போராடும்.

எல்லோருக்கும் எல்லா காலத்துக்கும் பெரியாரியம் பொருத்தமாக இருப்பதால்தான் இன்றைக்கும் தந்தை பெரியாரின் கருத்துகள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் வரை சென்றடைந்துள்ளன. நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள், சமீபத்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்துள்ளார். ஏனென்றால், தந்தை பெரியாரின் சிந்தனைகள் எல்லாம் மனிதநேய, மனித உரிமைகளுக்கான சிந்தனைகள்.

இன்றைக்கு இந்தியா முழுவதும் பா.ஜ.க.வுக்கு எதிராகப் போராடுகின்ற மக்கள் அனைவரும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் படங்களை கையில் ஏந்தி முழக்கமிடுவதை, நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் அரசியல் ரீதியாக தமிழ்நாட்டைப் பக்குவப்படுத்தி வைத்துள்ளார். அதனால்தான் பா.ஜ.க.வின் எந்த தில்லு முல்லு வேலையும் இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடவில்லை.

அய்யா ஆனைமுத்து எழுதிய கட்டுரை ஒன்றில், பெரியார் வென்றாரா? என்ற கேள்வியை அவரே கேட்டுவிட்டு, அதற்கு அவரே பதிலளித்துள்ளார். பெரியார் தோற்றார் என்று சொன்னோம் என்றால், அது ஒட்டுமொத்த தமிழர்களின் தோல்வி என்று அர்த்தம் என்று ஆனைமுத்து அவர்கள் ஒரு கட்டுரையில் எழுதியுள்ளார். எனவே, தந்தை பெரியார் அவர்கள் எப்பொழுதும் வெல்வார். பெரியாருக்குத் தோல்வியே கிடையாது. தமிழ்நாடு அதேபோல் எப்போதும் வெல்லும், தமிழர்கள் எப்போதும் வெல்வார்கள் அதை யாராலும் தடுக்க முடியாது.

ஈரோட்டுப் பாதையில் நடைபோடுவதால்தான் இன்றைக்கு திட்டங்களிலும், கொள்கைகளிலும் ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டியாக இருந்து வருகிறார். தனித்தனியாக செயல்பட்டாலும் பெரியாரின் இயக்கத் தோழர்கள் பல நாட்களுக்குப் பிறகு இன்றைக்கு ஒரே மேடையில் ஒற்றுமையாக உட்கார்ந்து இருக்கிறீர்கள். அதைப் பார்க்கும் பொழுது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதே ஒற்றுமையுடன் தந்தை பெரியாரின் கருத்துகளை நாம் இன்னும் அதிகம் பரப்ப வேண்டும். இது போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடத்த வேண்டும்.அப்படி நிகழ்ச்சி நடத்தினீர்கள் என்றால் நிச்சயம், எப்போதெல்லாம் என்னிடம் தேதி கேட்கிறீர்களோ அப்போதெல்லாம் நான் எந்தத் தயக்கமும் இல்லாமல், உங்கள் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வேன். எப்போதும் இல்லாத அளவுக்கு, இது மாதிரியான நிகழ்ச்சிகள் நமக்கு இப்போது தேவைப்படுகிறது.

கொள்கையற்ற இளைஞர் கூட்டம் இப்போது உருவாகி வருகிறார்கள். அவர்களை கொள்கைமயப்படுத்த வேண்டிய பொறுப்பு எல்லோரையும் விட நமக்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே, நாம் அனைவரும் சேர்ந்து அய்யா ஆனைமுத்து காட்டிய வழியில் பெரியாரியத்தை இன்னும் அதிகமாக பரப்புவோம். அதற்கு நானும், இளைஞர் அணியும், நம் தலைவர் அவர்களும் நிச்சயம் உங்களுடன் துணை நிற்போம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நிகழ்ச்சி

அறிஞர் வே. ஆனைமுத்து நூற்றாண்டு நிறைவு விழா மலர் வெளியீடு அக்-10 அன்று காலை 10 மணிக்கு, சென்னை அடையாறு முத்தமிழ் பேரவையில், மா.பெ.பொ.க துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் தலைமையில் நடைபெற்றது. மா.பெ.பொ.க தலைமைக்குழு உறுப்பினர் சா. குப்பன் வரவேற்புரையாற்றினார்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மக்களவை உறுப்பினர் ஆ. ராசா, உயர்நிலைக் குழு உறுப்பினர் மு. நாகநாதன், போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் திஇதபே தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தபெதிக பொதுச் செயலாளர் கோவை ராமகிருஷ்ணன், புலவர் செந்தலை ந. கவுதமன் (சூலூர் பாவேந்தர் பேரவை), மாபெபொக பொதுச் செயலாளர் துரை. சித்தார்த்தன், மாபெபொக தலைமைக் குழு உறுப்பினர் க. முகிலன் ஆகியோர் உரையாற்றினர். மாபெபொக காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன் நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் திவிக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், காஞ்சி மாவட்டத் தலைவர் கா.ரவிபாரதி, வேலூர் மாவட்டச் செயலாளர் இரா.ப. சிவா, திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் கோபிநாத், பாரிசிவா ஆகியோர் பங்கேற்றனர்.

# கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெரியாரின் ஆதரவு

**பெரியாரிய மார்க்சிய சிந்தனையாளர் எஸ்.வி.ஆர்(எஸ்வி ராஜதுரை) எழுதிய பெரியார் குறித்த ஆங்கில நூல் ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. “பெரியார்: ஜாதி தேசம் மற்றும் சோசலிசம்” என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்த ஆங்கில நூல், உரையாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளது. பெரியார், அம்பேத்கர் சிந்தனையாளரான வித்யாபூஷன்ராவத் என்ற ஜாதி எதிர்ப்புப் போராளி எஸ்.வி.ஆர் அவர்களிடம் நிகழ்த்திய உரையாடலின் தொகுப்பே இந்த நூல். கடந்த இதழின் தொடர்ச்சி....**

கீழ்வெண்மணி படுகொலை தொடர்பாக பெரியார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஏற்கெனவே திட்டவட்டமான மறுப்புகள் வெளிவந்துள்ளன. எஸ்.வி.ஆர் இந்த நூலிலும் ஒரு தனி அத்தியாயத்தையே ஒதுக்கி விரிவாக பெரியார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். இதேபோன்று தீவிர காங்கிரஸ்காரராகவும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வகித்தவருமான எல்.இளையபெருமாள் பெரியார் தலித் மக்களுக்கு ஏதும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டினார், பெரியார் இயக்கத்தில் இருந்து வெளியேறிய கே.பி.எஸ் மணி, தொண்டு வீராசாமி ஆகியோர் பெரியார் தலித் மக்களின் ஆதரவாளர் அல்ல என்று கூறினார்கள் என சில அறிவுஜீவிகள் திட்டமிட்டு பிரச்சாரம் செய்கிறார்கள். குறிப்பாக ரவிக்குமார் தனது தலித் பத்திரிகையில் இந்த குற்றச்சாட்டுகளை முன் வைத்தார். இந்த குற்றச்சாட்டுகளுக்கு வலிமையான மறுப்பை இந்த நூல் பதிவு செய்துள்ளது. (ஏற்கெனவே புரட்சிப் பெரியார் முழக்கத்தில் 2014-ம் ஆண்டு செப்டம்பரில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி 8 வாரங்கள் வரலாற்றுத் தகவல்களோடு வலிமையான மறுப்பை முன் வைத்திருக்கிறார்.)

**கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட போது அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தது திராவிடர் கழகம். களம் இறங்கி செயல்பட்டார் பெரியார்.**

பெரியார் நில உடைமைக்காரர்களின் ஆதரவாளராக குற்றம் சாட்டுகிறார்கள். இந்த குற்றச்சாட்டையும் இந்த நூல் மறுக்கிறது. பெரியார் இயக்கத்தில் முன்னணி அமைப்பான திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் நடத்திய தொடர் போராட்டங்கள் காரணமாகவே 1954 இல் ராஜகோபாலாச்சாரி விவசாய தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டு வந்தார். ஆச்சாரியார் ஆட்சியை கடுமையாக எதிர்த்து வந்த பெரியார் இந்த சட்டத்தை ஆதரித்தார். காமராசர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்பு சட்டத்தை நில உடமையாளர்கள் கடுமையாக எதிர்த்தனர். பெரியார் அந்த சட்டத்தில் சில ஓட்டைகள் இருந்தாலும் கூட ஆதரித்தார். உச்சவரம்பு சட்டம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த போது உச்ச நீதிமன்றத்தை கண்டித்துக் கண்டனக் கூட்டங்களை அறிவித்தவர் பெரியார்.

பெரியாரும் சிங்காரவேலரும் இணைந்து சுயமரியாதை சமதர்ம கட்சியைத் தொடங்கினார்கள். இது சுயமரியாதை இயக்கத்தில் கருத்து மாறுபாடுகளுக்கு உள்ளானது. பெரியார், சுயமரியாதை இயக்கத்துக்கே முன்னுரிமை தர வேண்டும் என்பதற்கான காரணங்களை ‘குடிஅரசு’ பத்திரிகையில் எஸ். ராமநாதன் விரிவாக கட்டுரை எழுதினார். இந்த அரசியல் அமைப்பு பார்ப்பன எதிர்ப்பை நீர்த்துப்போகச் செய்யும் என்று எச்சரித்தார். மற்றொரு சுயமரியாதைக்காரரான பொன்னம்பலனாரும் இதே கருத்தை வலியுறுத்தினார். சிங்காரவேலர் இந்த கருத்துக்களுக்கு எதிர்வினையாற்றினார்.

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்

# தொடர்ந்து விவாதிப்போம்



அனைவருக்கும் வணக்கம்,

28.9.2025 அன்று கோவையில் நடந்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் பயிலரங்கின் நிறைவில் என்னிடம் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்கு நான் அளித்த பதிலை மையமிட்டு பல்வேறு பதிவுகள் வெளிவந்த வண்ணமாக இருந்தன. அது குறித்து நான் சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன்.

எழுப்பப்பட்ட கேள்விகளில் ஒன்று ‘‘ஈரோட்டுப் பாதை சரியா?’’ என்ற நூலில் தோழர் ஜீவா அவர்கள் எழுப்பிய கேள்வி குறித்து உங்கள் விளக்கம் என்ன? என்பதுதான்.

அந்த நூல் ஏற்கனவே ‘தமிழன் தொடுத்த போர்’ என்ற தலைப்பில் 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டம் குறித்து எழுதி இருந்த தோழர் மா. இளஞ்செழியன் அவர்களால் எழுதப்பட்ட 1947 ஆண்டு பிற்பகுதியில் வெளியான ஒரு நூலை விமர்சித்து எழுதப்பட்டதாகும்.

அவர் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து 1944 வரையான காலத்தை நான்கு கட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்தும் செயல்பாடுகள் குறித்தும் எழுதியிருந்த ‘‘ஈரோட்டுப் பாதை’’ என்ற நூலுக்கு எதிராக எழுதப்பட்ட ஒன்றுதான் ஜீவா அவர்கள் 1947 டிசம்பர் முதல் 1948 பிப்ரவரி வரை ‘ஜனநாயகம்’ என்ற இதழில் எழுதிய கட்டுரைத் தொகுப்பே ஈரோட்டுப் பாதை சரியா? என்ற நூலாகும்.

அந்த நூலினைப் படித்தவர்களுக்குத் தெரியும். பெரியாரின் அனைத்து நடவடிக்கைகளும் ஒரு உள்நோக்கம் கொண்டே செய்யப்பட்டன என்றும், ஆங்கிலேயர் அரசின் ஆதரவு பெற – ஜமீன்தார், பெரு முதலாளிகளின் ஆதரவைப் பெற – காங்கிரசுக்கு எதிராக இயங்க – மாகாண ஆளுநரின் நட்பைப் பெற என்ற பல்வேறு சுயநல எண்ணங்களோடு தான் அனைத்துச் செயல்பாடுகளும் பெரியாரிடம் இருந்தது என்பதாகத்தான் அது இருக்கும்.

மேலும் யமுனா ராஜேந்திரன் குறிப்பிட்டிருப்பதைப்போல "ஈரோட்டுப் பாதை நூலில் இடையறாது ஓடும் ஒரு சரடு, திராவிடர் கழகம் இடைநிலை ஜாதிகளின், நிலச்சுவான்தார்களின், லேவாதேவிக்காரர்களின், பெரும் பணக்காரர்களின் இயக்கமாகவும் அது இருந்தது’’ என்பது.

சுருக்கமாக தோழர் ஜீவா அவர்கள் பெரியாரோடு இயங்கிய காலத்தில் ஏற்றுக் கொண்டிருந்த இந்தி எதிர்ப்பு, வகுப்புவாரி உரிமை, கம்பராமாயணம் போன்ற புராண நூல்கள் மீதான எதிர்ப்பரப்புரைகள் ஆகிய அனைத்துக்கும் எதிராகச் சுயமரியாதை இயக்கத்தில் இருந்து வெளியேறியவுடன் செயல்பட்டார்.

எப்படி சீமான் பெரியார் இயக்கத்தோடு இயங்கிய காலத்தில் ஏற்றுக் கொண்டிருந்த கடவுள் மறுப்பு, ஜாதி எதிர்ப்பு, திராவிடர் அடையாளம், போன்ற கருத்துக்களை அமைப்பிலிருந்து விலகித் தனி இயக்கம் கண்ட பின்னர் நேர் எதிராகப் பேசினாரோ அவ்வாறே தான் தோழர் ஜீவா அவர்களும் பேசினார்; செயல்பட்டார்.

அதைக் குறிப்பிடவே ‘சீமானின் முன்னோடி’ ‘அன்றைய சீமான்’ என்ற சொற்களை நான் அதில் பயன்படுத்தியிருந்தேன். அச்சொற்றொடர்தான் பலரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

அதற்கு எதிர்வினையாக முகநூலில் பலரும் பதிவிட்டு இருந்ததை எனக்கு தோழர்கள் அனுப்பி வைத்தனர் (எனக்குத் தனியாக முகநூல் கணக்கு இல்லாததால்).

அதில் வில்லன் சிரிப்பு, நிலப்பிரபுத்துவ ஆணவம், பண்ணையார்த்தனம், கழிசடை, அற்ப மானுடப் பதர், செக்கின் மேல் காலைத்தூக்கும் ஒன்று, பிரபாகரன் கடைசி நாளில் என்னை ஒதுக்கி வைத்தார், பெரியார் சிலைகளுக்கு முன்னர் திருமணங்கள் நடத்தி வைத்து பல பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்தது போன்ற சொற்களோடு விமர்சனங்கள் வந்து கொண்டே இருந்தன.

ஒரு பயிலரங்கில் தன்னுடைய அமைப்பின் தோழர்கள் தங்கள் இயக்கத் தலைவர் குறித்து எழுப்பப்பட்ட விமர்சனம் குறித்து அறிந்து கொள்வதற்கு வினா எழுப்புவதும், அதற்கு விளக்கம் கொடுப்பதும் தவறான ஒன்றாகப் பார்க்கப்படுவது, அதுவும் பொதுவுடமை கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களால் என்பதே அதிர்ச்சியான ஒன்றுதான்.

இந்திய சுதந்திரம் குறித்து ‘விடுதலை’யும் ‘ஜனசக்தி’யும் 1947 ஜூலையிலிருந்து 1949 வரை விவாதித்திருக்கின்றன. அதுபோலவே திராவிட நாடு, சுயநிர்ணய உரிமை, வடநாட்டுச் சுரண்டல், பார்ப்பனியம் ஆகியவை குறித்தும் 1952 ஆகஸ்ட் முதல் 1953 பிப்ரவரி வரை தொடர் விவாதம் நடந்திருக்கிறது.

அவ்வகை விவாதம் நடந்தால் அது பல செய்திகளை இருதரப்பாரும் புரிந்து கொள்ளவும், சரியானவற்றை ஏற்றுக் கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும் என்பதே என் கருத்தாகும். தோழர் மு.வீரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டிருந்ததைப் போல இது ஒரு வளர் முரணாக அமைந்து புதிய கருத்து நிலைக்குக் கூட இட்டுச் செல்லும்.

வரலாற்றை மீண்டும் நினைவு கூறுவதோ, சுட்டிக் காட்டுவதோ ஒருவரை இழிவாக்கும் நோக்கம் கொண்டது மட்டுமே என்ற எண்ணத்தில் இருந்து நாம் விலகி நின்று தொடர்ந்து விவாதிப்போம். தோழர் ஜீவா அவர்களின் "ஈரோட்டுப் பாதை சரியா?" என்ற நூலில் வைக்கப்பட்டுள்ள விமரிசனங்கள் குறித்து என்னுடைய கருத்துக்களை எங்கள் இதழான ‘புரட்சிப் பெரியார் முழக்கத்தில்’ நான் முன்வைக்க இருக்கிறேன். அதுவரை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் எதிர்வினை ஆற்றாமல் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். பொதுவுடமையாளர்களில் சிலர் நமக்கு எதிராகக் கூட இருக்கலாம்; ஆனால் பொதுவுடமை கொள்கை நமக்கு எதிரானது அல்ல என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்த இதழில் தொடங்குகிறது...

– கொளத்தூர் மணி,
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.
10.10.25.

# ஆர்.எஸ்.எஸ் முகாமில் பாலியல் வன்முறைகள்

கேரள மாநிலம் கோட்டயம் அருகே உள்ள பொன்குன்னம் பகுதியைச் சேர்ந்தவர் அஜி. இவரது மகன் ஆனந்த் அஜி (24) ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் செயல்பட்டு வந்த இவர் சமீபத்தில் அந்த அமைப்பில் இருந்து விலகினார்.

இவரது தந்தை கடந்த சில வருடங்களுக்கு முன் மரணமடைந்தார். ஆனந்த் அஜி பொன்குன்னத்தில் தன்னுடைய தாய் மற்றும் தங்கையுடன் வசித்து வந்தார். இந்நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன் வீட்டைவிட்டு வெளியே சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லை. இதுகுறித்து வீட்டினர் கோட்டயம் போலீசில் புகார் செய்தனர்.


போலீசார் விசாரணை நடத்திவந்த நிலையில் அனந்து அஜி திருவனந்தபுரத்திலுள்ள ஒரு லாட்ஜில் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். போலீசார் அவரது உடலைக் கைப்பற்றி விசாரணை நடத்தினார்.

இந்நிலையில் ஆனந்த் அஜியின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு பதிவு வெளியானது. இந்த பதிவை அவர் தன்னுடைய மரணத்திற்குப் பின் வெளியாகும் வகையில் டைம் செட்யூல் செய்திருந்தார். அதில் கூறியிருந்த விவரங்கள் வருமாறு: என்னுடைய நான்காம் வயதில் தந்தை தான் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் சேர்த்தார். அன்று முதல் ஆர்.எஸ்.எஸ் முகாமுக்கு வருபவர்கள் என்னை பாலியல்ரீதியாக கொடுமைப்படுத்தி வந்தனர்.

இதனால் மனரீதியாக நான் கடுமையாக பாதிக்கப்பட்டேன். என்னுடைய தாய் மற்றும் தங்கையை நினைத்துத் தான் நான் இதுவரை தற்கொலை செய்யாமல் இருந்தேன். ஆனால் இப்போது எனக்கு வேறு வழி தெரியவில்லை. என் னைப் போல மேலும் பலர் ஆர்.எஸ்.எஸ் முகாமில் கொடுமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். அந்த அமைப்பில் இருந்து வெளியேறியதால் தான் என்னால் இதை கூற முடிகிறது. என்.எம். என்பவர் தான் என்னை மிகவும் கொடுமைப்படுத்தினார்.என்னுடைய தந்தை தான் என்னை ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் சேர்த்தார். பெற்றோர் தங்களது குழந்தைகளை பாசத்துடன் வளர்க்க வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனந்த் அஜியின் தற்கொலைக்கு காரணமான ஆர்.எஸ்.எஸ் அமைப்பினரை கைது செய்ய வேண்டும் என்று இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

### முதல் பக்கத் தொடர்ச்சி...




குடி அரசு இதழில் இந்த விவாதங்களுக்கு இடம் அளித்தார் பெரியார். (ஜீவா பெரியாரை கடும் சொற்களால் அர்ச்சித்து ஈரோட்டுப் பாதை சரியா? என்று எழுதுய நூல் இப்போது சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறது. இந்த அத்தியாயத்தில் இது குறித்து விரிவான தகவல்கள் இடம்பெற்று இருக்கின்றன).

1949 ஆம் ஆண்டு இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை நேரு அரசாங்கம் தடை செய்தது. தடையை கண்டித்து எழுதிய ஒரே ஏடு ‘விடுதலை’. கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு திராவிடர் கழகத்தினர் அடைக்கலம் தந்தார்கள். கம்யூனிஸ்டுகள் மீதான அரசு அடக்குமுறையை திராவிடர் கழகம் கண்டித்தது. 12 கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரணதண்டனையை எதிர்த்து போர்க் கொடி உயர்த்தியது திராவிடர் கழகம்.

மரண தண்டனைக்கு எதிராக நாடு முழுவதும் இயக்கங்களை நடத்தியது. தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் திராவிடர் கழகத்தின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதினார்கள். சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு இருந்த கம்யூனிஸ்ட் தோழர்கள் சிறையில் தாங்கள் மோசமாக நடத்தப்படுவதை எதிர்த்து சிறைக்குள்ளேயே போராடினார்கள். சிறையில் துப்பாக்கி சூடு நடந்தது,18 கம்யூனிஸ்ட் தோழர்கள் சிறைக் கம்பிக்குள்ளே பலியானார்கள். அப்போது ’விடுதலை’ ஏடு இந்த அடக்கு முறையை கண்டித்து போர் முழக்கம் செய்தது. இறந்த உயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று வற்புறுத்தியது. தமிழ்நாடு முழுவதும் ஒடுக்கப்படும் கம்யூனிஸ்ட்களுக்கு ஆதரவாகவும், அடக்குமுறைகளை கண்டித்தும் மார்ச் 5 1950-இல் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்த வலியுறுத்தி பெரியார் அறிக்கை விட்டார்.

படுகொலையைக் கண்டித்து திராவிடர் கழகம் மக்களிடம் கையெழுத்து இயக்கங்களையும் நடத்தியது. 1950 மார்ச்-5ம் தேதி திருச்சியில் மாபெரும் பொதுக்கூட்டத்தை திராவிடர் கழகம் கூட்டியது. அதில் பெரியார் பேசினார்; சோவியத் ரஷ்யாவுக்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளுடன் இந்தியா கைகோர்த்துக் கொண்டு கம்யூனிஸ்ட் தோழர்களை நசுக்கிக் கொண்டிருக்கிறது என்றார் பெரியார்.

தடை நீங்கி கம்யூனிஸ்ட் தோழர்கள் சிறையில் இருந்து விடுதலை அடையும் வரை திராவிடர் கழகம் களம் இறங்கி கடமை ஆற்றியது. விடுதலை ஆசிரியர் குத்தூசி குருசாமிக்கு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களில் ஒருவரான எம். கல்யாணசுந்தரம் கடிதம் எழுதினார். அதில் திராவிடர் கழகத்தினர் செய்த உதவி மகத்தானது என்றும் கம்யூனிஸ்ட் கட்சி திராவிடர் கழகத்தோடு இணைந்து நிற்கும் என்று குறிப்பிட்டுருந்தார்.

1952 பொதுத் தேர்தலில் பெரியார் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரித்தார். ஒரு சில தொகுதிகளில் நீதிக்கட்சியைச் சார்ந்த வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். உடனே கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் பெரியார் எதிர்ப்பை தொடங்கிவிட்டது. நிலப் பிரபுகளுக்கு பெரியார் ஆதரவு தருகிறார் என்று பெரியாரை கடுமையாக விமர்சித்தார்கள். இந்த வரலாறுகளை நூல் விரிவாகப் பேசிகிறது. பெரியார் முன்வைத்த சுயமரியாதைக் கோட்பாடு சமதர்மம், பார்ப்பன எதிர்ப்பு, ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புகளை உள்ளடக்கியே தனது பயணத்தை தொடர்ந்து இருக்கிறது என்ற கருத்தை வரலாற்று தரவுகளுடன் முன்வைக்கும் சிறப்பான நூல் இது. இடதுசாரி சிந்தனையாளர்கள் அவசியம் படிக்க வேண்டும். **(நிறைவு)...**

– இரா.

# நாத்திகம் பேசிய பார்ப்பன சிந்தனையாளர்கள்

**கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை-19** - விடுதலை இராசேந்திரன்

**பார்ப்பனராக பிறந்தாலும் பார்ப்பனியத்தை மறுத்த இரண்டு நாத்திகர்கள் பற்றிய தகவல்களை இக்கட்டுரை விளக்குகிறது. ஒருவர் அஸ்ஸாமியப் பாடகர் ஜுபின் கார்க். அண்மையில் சிங்கப்பூரில் வடகிழக்கு இந்தியத் திரைப்பட விழாவில் பங்கேற்க சென்ற அவர் ஜான்ஸ் தீவின் கடற்கரையில் லைஃப் ஜாக்கெட் இல்லாமல் கடலில் நீந்தும்போது அவரை மரணம் அழைத்துக் கொண்டது. இப்போது மரணத்தின் சந்தேகங்கள் எழுந்துள்ளன.**

**மற்றொருவர் ஆந்திராவில் பார்ப்பனராக பிறந்து நாத்திகத்தை வாழ்வியலாக ஏற்று இயக்கம் நடத்திய கோரா (கோபராஜு ராமசந்திர ராவ்). பெரியாருடன் நெருக்கமாக இருந்தார். இருவரும் இணைந்து மாட்டுக்கறி-பன்றிகறி விழா நடத்தினார்கள்.**

செப்டம்பர் 19, 2025 அன்று, கார்க் சிங்கப்பூரில் வடகிழக்கு இந்தியத் திரைப்பட விழாவில் பங்கேற்க சென்றார். தனது 52 வயதில் இறந்தார். ஜான்ஸ் தீவின் கடற்கரையில் லைஃப் ஜாக்கெட் இல்லாமல் கடலில் நீந்தும்போது அவரை மரணம் அழைத்துக் கொண்டது. அசாம் அரசு செப்டம்பர் 20 முதல் 22 வரை மூன்று நாள் மாநில துக்கத்தை அறிவித்தது, செப்டம்பர் 23 அன்று 21 துப்பாக்கிக் குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் கார்க் தகனம் செய்யப்பட்டது.

மேகாலயாவின் துராவில் உள்ள ஒரு அசாமிய 'பார்ப்பன' குடும்பத்தில் மோகினி மோஹோன் போர்தாகூர் மற்றும் இலி போர்தாகூர் ஆகியோருக்கு 1972 நவம்பர் 18 அன்று ஜுபின் கார்க் பிறந்தார்.

கார்க் தனது மூன்று வயதிலிருந்தே பாடத் தொடங்கினார். 40 பிற மொழிகளிலும் மற்றும் அவர் பாடியுள்ளார். 2021-ம் ஆண்டில், அசாம் மொழி திரைப்படமான பிரைட் பை சான்ஸ் திரைப்படத்தின் "தோமர் கோலா ஹவா" பாடலுக்காக சிறந்த ஆண் பின்னணிப் பாடகருக்கான விருதை ஜுபீன் கார்க் பெற்றார். 2009- ம் ஆண்டு திரைப்பட இசை இயக்குனருக்கான தேசிய விருது வழங்கப்பட்டது. இந்த விருது எக்கோஸ் அஃப் சைலன்ஸ் (Echoes of Silence) என்ற திரைப்படத்திற்காக அவருக்கு வழங்கப்பட்டது.

அவர் மது அருந்துதல் பற்றியும் வெளிப்படையாகப் பேசினார் , ஒருமுறை அவரது சில பாடல்கள் அவர் குடிபோதையில் இருந்தபோது உருவாக்கப்பட்டவை என்று கூறினார். சர்ச்சைக்குரிய அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்க்க நலம் விரும்பிகளின் அறிவுரை இருந்தபோதிலும்,



கார்க் தனது கருத்துக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறினார். நீங்கள் எனக்கு ஆணையிட முடியாது; நான் யாருக்கும் எந்தத் தடையும் விதிக்கவில்லை, நீங்கள் என்னை ஆணையிட முடியாது") என்ற வரிகளுக்கு பெயர் பெற்றவர்.

அசாமில் நடந்த சிஏஏ (குடியுரிமை திருத்தச் சட்டம் -2019) எதிர்ப்புப் போராட்டங்களில் கலைஞராக பங்கேற்றார். அவரது "அரசியல் செய்யாதே, என் நண்பரே" என்ற பாடல் நாடு முழுவதும் ஒலித்தது. 2018 ஆம் ஆண்டில், கார்க், தடகள வீராங்கனை ஹிமா தாஸிடம் கோழி அல்லது புறா இறைச்சியை விட மாட்டிறைச்சியை உட்கொள்ளுமாறு பகிரங்கமாக அறிவுறுத்தினார். தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு மாட்டிறைச்சி அதிக பலத்தைப் பெற உதவும் என்று கூறினார். விளையாட்டுகளைப் பொறுத்தவரை, மதம், ஜாதி மற்றும் போன்ற காரணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு தடகள செயல்திறனுக்கு என்ன நன்மை பயக்கும் என்பதற்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார். இந்த அறிக்கை அசாமில் சர்ச்சையை ஏற்படுத்தியது.

2019 ஆம் ஆண்டில், ஜுபின் கார்க், "நான் ஒரு 'பிராமணன்' ஆனால் எனது (பிராமணர்கள் அணியும் பூணூலை) அறுத்துவிட்டேன். நான் முன்பே அந்த நூலை அகற்றிவிட்டேன், இன்னும் அதை அணியவில்லை. பூணூல் அணியும் பிராமணர்களைக் கொல்ல வேண்டும்" என்று கூறியபோது கடும் எதிர்ப்புகள் வந்தன. ஆனால், பின்னர் அவர் அப்படி அர்த்தப்படுத்தவில்லை என்று தெளிவுபடுத்தினார். "நான் அதை நகைச்சுவையாகச் சொன்னேன், அதனால் மக்கள் அதை தவறாகப் புரிந்துகொண்டனர். நான் சொன்னது - உயர்ஜாதி-தாழ்ந்த ஜாதி என்ற முறையை ஒழிக்க வேண்டும். அந்தக் கருத்தை நான் நம்புகிறேன். 'பிராமண' சமூகத்தின் முன் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன், கொலைசெய்வது எனது நோக்கம் அல்ல. ஆனால் பார்ப்பனிய மேலாதிக்க அடையாளங்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

ஏப்ரல் 2024 இல், பிஹு இசை நிகழ்ச்சியின் போது, அவர் கூட்டத்தினரிடம் 'கிருஷ்ணர்' ஒரு கடவுள் அல்ல1 ஒரு மனிதர் என்று கூறினார். பின்னர் அவர் மஜுலி மாவட்ட சத்ர மகாசபாவிலிருந்து தடை செய்யப்பட்டார் .

அவரது பாடல்களில் நாத்திக கருத்தை மக்கள் மொழியில் பாடியுள்ளார்.

*oi Dhormo Nuhou* ( நான் மதம் அல்லாது என்ற பாடல்), *Mur Monot Bhed Bhab Nai O Allah* ( என் மனதில் வேறுபாடு இல்லை அல்லாஹ்), *Ei Prithibi Ekhon Jagajibon* (உயிரின் வட்டம் நிகழ்த்தியது தான் பூமி) கடவுளை அழைக்காதே வாழ்க்கையே ஒரு சுழற்சி ஆகிய பாடல்கள் (*I am beyond religion / atheistic humanist*) என்ற கருத்தை வெளிப்படுத்தும் விதமாக இருந்தது.

" நான் மனிதன்; மனித சிந்தனைகள் மற்றும் மனித உணர்ச்சிகள் தான் என்னைப் பாதிக்கும்; 'ஆன்மா' என்ற சொல்லை நான் மதிக்கமாட்டேன்" என்று கூறினார்.

மனித நேயம், சமத்துவம், அறிவியல் கருத்துகளை அடிப்படையாக கொண்ட பாடல்களை அவர் பாடியுள்ளார். பாரம்பரிய இசை மரபுகளை நாட்டுப்புறப் பாடல்களை அதிகம் பாடினார். பல ஆண்டுகளாக அசாம் முழுவதும் 250 பழங்குடி சமூகங்களை இணைந்து 5000-க்கும் மேற்பட்ட நாட்டுப்புற பாடல்களை கற்று பாதுகாத்து வந்தவர். ஜிசி மற்றும் முக்தி ஆல்பங்கள் ஜாதிக்கு எதிரான கருத்துகளை கருப்பொருளாக கொண்டது. புகழ்பெற்ற தன்மை மற்றும் மேற்கத்திய இசை பாணிகள் குறித்த விமர்சனங்களை முன்வைத்தார். அசாமில் நாட்டுப்புற இசையின் வரையறை தொடர்பான விவாதங்களுக்கு பதில் அளிக்கும் விதமாக "நான் எனது பாடல்களை எனக்கு வசதியாக இருக்கும் விதத்தில் உருவாக்கினேன்; கலை என்பது சுதந்திரத்தைப் பற்றியது" என்றார். அசாம் மொழி திரைப்படங்களை எழுதி இயக்கி நடித்தார் அவரது சினிமா கருப்பொருள் அசாமிய அடையாளம் இளைஞர் லட்சியவாதம் சமூக மாற்றம் ஆகியவற்றை மையமாகக் கொண்டது.

கார்க்கின் மறைவு இந்தியா முழுவதும் பரவலான அஞ்சலிகளைத் தூண்டியது. பிரதமர் நரேந்திர மோடி , எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மற்றும் அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, ஏ.ஆர்.ஹ்மான் உள்ளிட்ட பல உயர்மட்ட நபர்கள் தங்கள் இரங்கலைத் தெரிவித்தனர்.

குவஹாத்தியில் ஒரு நினைவுச்சின்னத்துடன் கூடுதலாக, அவரது மரபை மதிக்கும் வகையில் ஜோர்ஹாட்டில் ஒரு நினைவுச்சின்னம் கட்டும் திட்டத்தை அசாம் அரசு அறிவித்தது.


2019 ஆம் ஆண்டு குவஹாத்தியில் உள்ள பி. போரூவா கல்லூரியில் நடந்த இசை நிகழ்ச்சியில், கார்க் தனது "மாயாபினி ராதிர் புகுத்" பாடலை தான் இறக்கும் போது இசைக்க வேண்டும் என்று கூறியிருந்தார். அவரது மரணத்தைத் தொடர்ந்து, இந்தப் பாடல் அவரது இறுதிச் சடங்கில் மட்டுமல்லாமல், அசாம் முழுவதும், வீடுகளிலும், பொது நிகழ்வுகளிலும் பரவலாக நிகழ்த்தப்பட்டு, நினைவேந்தல் இரங்கலாக மாறியது.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் துக்கத்தை வெளிப்படுத்தினார், கார்க்கை தனது "அன்பான சகோதரர்" என்று வர்ணித்து, அவரது "இனிய குரல் மற்றும் அடக்க முடியாத மனப்பான்மையை" பாராட்டினார், அவரது பாடல்கள் "என்றென்றும் அழியாதவை" என்று கூறினார்.

இசைத்துறையில் ஜுபீன் கார்க் ஏற்படுத்திய அழியாத முத்திரை மற்றும் ஆழமான தாக்கம் குறித்து தனது இரங்கல் பதிவில் ஏ.ஆர். ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

---

**கோரா:** (கோபராஜு ராமசந்திரச் ராவ் )1902 ஆந்திராவில் நெல்லூரில் பிறந்தார். அவர் இந்தியாவின் மிக முக்கியமான நாத்திக இயக்கத் தலைவர்.



இந்தியாவின் முதல் நாத்திக மையத்தை "*Atheist Centre*" 1940-ல் தொடங்கினார். அவரது இணையர் லலிதாவுடன் இணைந்தே சமத்துவம், ஜாதி ஒழிப்பு, பெண் விடுதலை கருத்துக்களை முன்னெடுத்தார்.

மனிதன் தான் தன் வாழ்க்கையின் 'கடவுள்' என்பது அவரது முக்கியக் கருத்து. கடவுளையும், மதத்தையும் மறுத்தார். ஆனால் அது வெறுப்பால் அல்ல! நாத்திக சிந்தனை நேர்மறையானது. அது மனிதம் மற்றும் பகுத்தறிவை உள்ளடக்கியது என்பதே அவர் கருத்து.

"கடவுள் இல்லாமல் நல்ல மனிதராக இருக்க முடியும்" மதம் மக்கள் மனதில் பயத்தையும், அடிமைத்தனத்தையும் உருவாக்குகிறது. "மதம் மனிதனை பிரிக்கிறது, ஆனால் நாத்திகம் மனிதனை இணைக்கிறது".

ஜாதி ஒழிப்பு, தலித், பெண்கள், விவசாயிகள் மத்தியில் சமத்துவக் கருத்துக்களை பரப்பினார்.

* மதமற்ற கல்வி; குழந்தைகளுக்கு அறிவியல் சிந்தனைகளைக் கற்பித்தல், "செக்யூலர் மேரேஜ்" சடங்கு, மதங்கள், ஜாதி கடந்த திருமணம் (மதமற்ற திருமணம்) ஆகியவற்றை அறிமுகம் செய்தவர்.

மாட்டுக்கறி உணவைப் பரப்ப வேண்டும் என்பதில் பெரியாருக்கும் கோராவுக்கும் ஒரே கருத்து இருந்தது. சென்னை பெரியார் திடலில் மாட்டுக்கறி விழாவில் பெரியாரும் கோராவும் பங்கேற்றனர்.

* ஐக்கிய நாடுகள் (UNO) வரை நாத்திகம் குறித்த உரைகளை நிகழ்த்திய இந்தியரவார்.அதே நேரத்தில் காந்தியாரின் எளிமையை வற்புறுத்தினார். அவரை "*The Gandhi of Atheism in India*" என்று வெளிநாட்டு பத்திரிகைகள் குறிப்பிட்டன. பெரியாரோடும் திராவிடர் கழகத்தினரோடும் நெருக்கமாக இருந்தார்

**அறிவியல் சிந்தனை மதத்தை அறிவியல் முறையில் விமர்சித்தார். பகுத்தறிவு, தர்க்கம் மூலம் மூட நம்பிக்கைகளை எதிர்த்தார்.**

**கோரா, பெரியாரை ஒருமுறை விஜயவாடா "*Atheist Centre*"-க்கு அழைத்தபோது, பெரியார் கூறினார்: "கடவுளை மறுப்பது என்பது வெறும் கருத்தியல் வாதமல்ல, அது மனிதனை விடுவிக்கும் புரட்சி." அதற்கு கோரா பதிலளித்தார்: "அந்த புரட்சிக்கு நாம் இருவரும் வேறு மாநிலங்களில் இருந்தாலும் ஒரே இரத்தம்."**

**இது இருவரின் நட்பையும், மரியாதையையும் வெளிப்படுத்துகிறது.**

"*Positive Atheism*" என்றால் "கடவுளை மறுப்பது மட்டும் அல்ல, மனிதனை நம்பி நல்லதைக் கட்டியெழுப்புவது." அதாவது, இது வெறும் 'கடவுள் இல்லை' என்ற எதிர்மறை நிலைப்பாடு அல்ல. இது 'மனிதனே தனது வாழ்க்கையின் அர்த்தம்' என்ற நேர்மறையான சிந்தனை என்பது கோராவின் கருத்து. விஜயவாடாவில் நடந்த நாத்திகர் மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து திராவிடர் கழகத் தோழர்கள் குடும்பம் குடும்பமாக பங்கேற்றனர்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்ச்சிகள்

## தமிழ்மதி-பிரகாஷ் இணையேற்பு விழா

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், மின்னக்கல் பகுதியைச் சார்ந்த திக வெண்ணந்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் செல்வகுமார் - மணிமேகலை ஆகியோரின் மகள் தமிழ்மதி அவர்களுக்கும், ராணிப்பேட்டை, நெமிலி வட்டத்தைச் சார்ந்த சௌந்தர் காந்திமதி ஆகியோரின் மகன் பிரகாஷ் அவர்களுக்கும் 06.10.2025 திங்கட்கிழமை அன்று காலை 11 மணியளவில் ஓலைப்பட்டியில் மணமகள் இல்லத்தில் சுயமரியாதை வாழ்க்கை இணை ஏற்பு விழா திராவிடர் கழகம் (பெரியார் அறக்கட்டளை தலைவர்) பொத்தனூர் க. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வி.சி.க நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் அன்பரசன் வரவேற்புரையாற்றினார். திக (மாநில ஒருங்கிணைப்பாளர்) ஊமை ஜெயராமன்,



திக (நாமக்கல் மாவட்டத் தலைவர்) குமார், திவிக (நாமக்கல் மாவட்டத் தலைவர்) சாமிநாதன், வி. சி. க (நாமக்கல் சேலம் மண்டல துணைச் செயலாளர்) அரசன், திவிக ( தலைமைக் குழு உறுப்பினர்) காவை. ஈஸ்வரன், திக(சேலம் மாவட்டத் தலைவர்) வீரமணிராஜ், திக (சேலம் மாவட்டச் செயலாளர்) மூணாங்கரடு சரவணன், பகுத்தறிவாளர் கழக நாமக்கல் மாவட்டத் தலைவர் வீரமுருகன் ஆகியோர் கருத்துரையாற்றி மணமக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

கழகத் தலைவர் கருத்துரையாற்றி, தமிழ்மதி - பிரகாஷ் ஆகிய இணையர்களுக்கு வாழ்க்கை துணைநல ஒப்பந்தம் செய்து வைத்து, "நமக்கு ஏன் இந்த இழிநிலை" என்ற புத்தகத்தை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிறைவாக திக வெண்ணந்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் செல்வகுமார் நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் தி.க. நாமக்கல் மாவட்ட செயலாளர் வை. பெரியசாமி, தி. க. ஆட்டையாம்பட்டி பகுதிச் செயலாளர் காளியப்பன், தி. க. சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் வீரச்செல்வன் (எ) துரை சக்திவேல், தி. க நாமக்கல் மாவட்டச் துணைத் தலைவர் அசேன், சின்னப்பம்பட்டி கிளை பொறுப்பாளர் உல. கண்ணடி, உல. கருணாநிதி, தி. க இளைஞரணி பொறுப்பாளர் அண்ணாதுரை,செங்குட்டுவன், சதிஷ்குமார் ஆகிய திராவிடர் கழகத் தோழர்களும், நாமக்கல் மாவட்ட பகுத்தறிவாளர் கழகத் சார்ந்த அறிவாயுதம், ராமசந்திரன் ஆகிய பகுத்தறிவாளர் கழகத் தோழர்களும், திராவிடர் விடுதலைக் கழக ராசிபுரம் நகரப் பொறுப்பாளர் காரல் மார்க்ஸ், சுமதி, கொளத்தூர் குமரேசன், கணேஷ், அவினாசி ஆகிய கழகத் தோழர்கள் மற்றும் விசிக, திமுக ]மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஆதித்தமிழர் பேரவை ஆர்ப்பாட்டம்

உள் இடஒதுக்கீடு உரிமை நாள் மற்றும் நெருப்புத் தமிழன் நீல வேந்தன் வீரவணக்க நாளில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு பட்டியல் சமுதாய இட ஒதுக்கீட்டை வகைப்படுத்திட வலியுறுத்தி தமிழக முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. ஆதித்தமிழர் பேரவையின் சேலம் மாவட்டத்தின் சார்பாக 26.09.2025 வெள்ளிக்கிழமை அன்று கோட்டை மைதானத்தில் மாலை 4 மணி அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




ஆதித்தமிழர் பேரவையின் மாநில துணைப் செயலாளர், சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் ஏ. டி. ஆர். சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ஆதித்தமிழர் பேரவையின் மாநகர மகளிர் அணி செயலாளர் கல்யாணி, மாவட்ட மாணவரணி செயலாளர் தினேஷ், மாவட்ட இளைஞரணி செயலாளர் மாணிக்கம், மாவட்ட தொண்டரணி செயலாளர் அருள்குமார், சேலம் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணா, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் யுவராஜ், மாவட்ட தொண்டரணி துணைச் செயலாளர் தனுஷ், ஓமலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநிலத் தலைவர், அருந்ததியர் மக்கள் இயக்கம் கு. தங்கராசு, தி க சேலம் மாவட்ட மாவட்டத் தலைவர் வீரமணிராஜி, மதிமுக மாநகர செயலாளர் அ.அருள்மாது, புஇமு அ. வின்செண்ட், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியைச் மாரியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவாக உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் கழகத் தோழர்கள் சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பொ. கிருஷ்ணன், சேலம் மாநகரத் தலைவர் பாலு, சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், தோப்பூர். கண்ணன், அருள் பாண்டியன், பாலாஜி, நவராஜ், தேவ மூர்த்தி, காவலாண்டியூர் அவிநாசி, அம்பிகாபதி, சேலம் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கவியரசு, சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சீனி தேவசுந்தரம் நினைவு படத்திறப்பு



தேவகோட்டை பகுத்தறிவாளர் கழகத்தின் தலைவராக செயல்பட்ட சீனி தேவசுந்தரம் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு மதுரை மாவட்டக் கழகத்தின் (காப்பாளர்) தளபதி தந்தையும், தேவகோட்டை பகுத்தறிவாளர் கழகத்தின் தலைவர் சீனி தேவசுந்தரம் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தளபதி இல்லத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி சீனி தேவசுந்தரம் படத்தை திறந்து வைத்து திராவிடர் இயக்கம் சார்ந்த செய்திகளை பகிர்ந்து கொண்டார்.

நிகழ்வில் தமிழ் மக்கள் முன்னணி தலைவர் மீ.த. பாண்டியன், தமிழ்நாடு பெண்கள் இயக்கத் தலைவர் தொ. ஆரோக்கிய மேரி, மணியம்மை பள்ளியின் தாளாளர் வரதராசன், ரஜினி, புரட்சிக் கவிஞர் பேரவையின் நாகபாலன், வழக்கறிஞர் பகத்சிங், தமிழ் தேசிய பேரியக்க தோழர்கள் மற்றும் அவரின் நண்பர்கள், குடும்ப நண்பர்கள் பலர் கலந்து கொண்டு தங்களது உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர். கழகத் தோழர்கள் மதுரை மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, மேலூர் பகுதி பொறுப்பாளர் சத்தியமூர்த்தி, அழகர், முருகேசன், வாசுகி தோழர்கள் கலந்து கொண்டனர்.

## மகிஷா மண்டல விழா



மகிஷா மண்டல விழா குழு சார்பாக கர்நாடகா மாநிலம், மைசூர் மாவட்டத்தில் உள்ள டவுன் ஹாலில் 24.09.2025 புதன்கிழமை அன்று காலை 11 மணி அளவில் மகிஷா மண்டல விழா நடைபெற்றது.

டவுன்ஹால் வளாகத்தில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சி மேடையில் அமைத்த புத்தர், அம்பேத்கர், மகிஷாசூரன் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியை கர்நாடக மாநில ஓய்வுப்பெற்ற முன்னாள் துணை காவல் ஆணையர், இந்திய புத்த கவுன்சில் எஸ். சித்தராஜு ஐ.பி.எஸ்., ஒருங்கிணைத்தார். முன்னாள் மைசூர் மேயர் மற்றும் மகிஷா மண்டல விழா குழுத் தலைவர் புருஷோத்தம் தலைமையேற்று உரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி நமக்கான சிந்தனையாளர்களை, நமக்கான தலைவர்களை, நமக்காக நின்ற முன்னோர்களை இழிவு படுத்துகிற போக்கை தகர்த்தெறிய, நம்மை கொண்டிருக்கிற இன்றைக்கு வரைக்கும் இழிவுபடுத்தி, நாம் தலை தூக்காமல் செய்கின்ற ஆரிய பார்ப்பன சிந்தனையாளர்களை, நாம் எதிரிகளாக அடையாளப்படுத்துவோம், அவர்களுடைய சூழ்ச்சிகளில் இருந்து நம்மை விடுவிப்போம் என்று கூறி உரையாற்றினார்.

சுவாமிஜி உரிவீங்க பெட்டி மாதா ஞானபிரகாஷ் சுவாமி, புகழ்பெற்ற சிந்தனையாளார் பேராசிரியர் கே. எஸ். பகவான், முன்னாள் துணை காவல் ஆணையர், இந்தியா புத்த மத கவுன்சில் எஸ். சித்தராஜு, ஐ. பி. எஸ், மகிஷா மண்டல மைசூர் என்ற புத்தகத்தை எழுதியவர் சித்த ஸ்வாமி, நரசை மானச சங்கோத்திரி டாக்டர். திலீப் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினார்கள்.

கர்நாடக மாநிலம் கழகத் தோழர் சித்தார்த்தன், கற்பி ஒன்றுசேர் குழுவைச் சார்ந்த நாகரத்தினா, பி. ஜார்ஜ், பீம்ராவ் மற்றும் இடதுசாரி அமைப்புகள், முற்போக்கு சிந்தனை அமைப்புத் தோழர்கள் என பல தரப்பினர் கலந்து கொண்டனர்.

## திருநாகேஸ்வரத்தில் பெரியார் பிறந்தநாள் விழா

தந்தை பெரியாரின் 147-வது பிறந்தநாள் விழா பெரியார் கல்வி விழிப்புணர்வு சங்கம் சார்பில் 20.09.2025 சனிக்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் திருநாகேஸ்வரம் ஆர். பி.எஸ் நினைவரங்கம் கடைவீதி பகுதியில் நடைபெற்றது.

திருநாகேஸ்வரம் மேலவீதியில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு கழகத் தலைவர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ரஞ்சன் இசைக்குழு, கங்கை கருங்குயில் கலைக்குழு பறை முழக்கத்தோடு பேரணியாக 300-க்கும் மேற்பட்ட பெண்கள், 100 மேற்பட்ட ஆண்கள் ஆர்.பி.எஸ் ஸ்டாலின் நினைவு அரங்கத்திற்கு வந்து சேர்ந்தனர்.

நிகழ்ச்சிக்கு பெரியார் கல்வி விழிப்புணர்வு சங்கத் தலைவர், கவுன்சிலர் நா. தமிழ்மணி தலைமையில் நடைபெற்றது. திருநாகேஸ்வரம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் உதயா, திராவிட விடுதலைக் கழக தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் சோலை மாரியம்மன், குடந்தை ஆர்.பி.எஸ் அருண் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சி மேடையில் கரகாட்டம், கட்டைக்குச்சி ஆட்டம், பொய்கால் குதிரை ஆட்டம், பெரியார் பற்றிய பாடல்கள் என பாடினார். வழக்கறிஞர் ஆர்.பி.எஸ் விஜய் ஆனந்த் வரவேற்புரையாற்றினார்.

பேராசிரியர். சுந்தரவள்ளி பெரியாரின் வாழ்க்கை வரலாற்றையும், பெரியார் தமிழ்நாட்டு மக்களுக்காற்றிய தொண்டுகள் பற்றியும் உரையாற்றினார். இவருடைய பேச்சை கேட்டு அங்கிருந்த பெண்கள் பலர் பாரட்டினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நீதிகட்சி சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு செய்த நன்மைகளை பற்றி விளக்கி சிறப்புரையாற்றினார்.

மதிமுக மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் ரா. முருகன், பெரியார் கல்வி விழிப்புணர்வு சங்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. குமார், மருத்துவர். ராதிகா வேணுகோபால், கழகத் தோழர் குடந்தை ஒன்றியத் அமைப்பாளர் வெங்கடேசன், திமுக, பாமக, கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





**செய்தி: கவியரசு**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : October 17 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran